விலை சதம் 5 | முதற் பதிப்பு | பக்கங்கள் 6

சுதந்திரன்

THE "SUTANTIRAN."

(TAMIL DAILY OF THE TAMIL SPEAKING PEOPLE)

REGISTERED AS A NEWSPAPER AT THE G. P. O.

இலங்கையினதும் இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களதும் சுதந்திரத்திற்காக வெளிவருவது.

Telegrams: 'SUTANTIRAN' COLOMBO

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

நாமார்க்கும் குடியல்லோம்

புத்தகம் 1 | கொழும்பு, சாவலரு வரு மார்கழி 6 உ ஞாயிற்றுக்கிழமை — Colombo December, 21, 1947 — ஸ்ரீஜய வருஷம் 1967 ஸபர் பிறை 8 | இதழ் 200

"சுதந்திரன்"

விளம்பர விபரங்கள்

சுதந்திரனில் ஒப்பந்தத்தின் பேரில் விளம்பரம் செய்ய விரும்புகிறவர்களும், அவசரகால அறிவித்தல்களுக்கு விரும்புகிறவர்களும் எழுதுங்கள்.

மானேஜர்,
"சுதந்திரன்"
194 A. தட்டாரத் தெரு, கொழும்பு.

உங்கள் தேவைக்கான

சாப்புச் சாமான்கள், புட்டி மருந்துகள், பால் உணவுகள், டின் ஆகார வகைகள், இங்கிலிஷ் பிஸ்கெட்டுகள் ஆகியவை எங்களிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் நியாயமான விலையில் கிடைக்கும்.

கே. எம்.
அரிசிமியாப் பிள்ளை & சன்ஸ்,
847, மெயின் ஸ்டிரீட்,
கொழும்பு.
டெலிபோன்: 4586

'Phone: 3411

வட மாகாணத்தில் ஒரு குடியேற்றத் திட்டம் வேண்டும்

நஷ்ட ஈடு கொடுப்பதில் சொத்து மதிப்பிடும் இலாகாவின் தாமதம்

விவசாயப் படையை சீர்திருத்தி அமைக்கவேண்டும்

உள்நாட்டு உணவுப்பொருள் கொள்முதல் திட்டத்திற்கு பலமான கண்டனம்

சரியான கொள்கையில் கூட்டுறவு இயக்கம் நடைபெறவில்லை

பால் விநியோக ஸ்தாபனங்களில் பாரபட்சமா?

கொழும்பு, டிச 20

பாராளுமன்றம் நேற்றுக் காலை சபாநாயகர் திரு ஏ. எப். மொலமுரே தலைமையில் சபை கூடியபோது, "யாழ்ப்பாணம் இன்று குடிஜன நெருக்கமுடையதாக இருக்கிறது. இந் நிலைமை மாறுவதற்கு ஒரு குடியேற்றத் திட்டம் வேண்டும். பூநகரி அண்மையிலிருப்பதாலும் தரிசு நிலங்கள் ஏராளமாக இருப்பதாலும் இக் குடியேற்றத் திட்டத்தை ஆங்கு வகுக்கப்பட வேண்டும்" என்று சாவகச்சேரி பிரதிநிதி திரு குமாரசாமி கூறினார்.

கிருஷிக இலாகா அபிவிருத்திக்கு ஆவன செய்ய வேண்டுமென்றும் சொத்து மதிப்பிடும் இலாகா வேலைகள்பற்றி யும் நஷ்டஈடுகள் வழங்கப்படுவதில் தாமதங்கள் இருக்கப்படாதென்றும் உள்நாட்டு பொருள் கொள்வனவுத் திட்டம் பற்றியும் பல அங்கத்தினரும் பேசினர்.

பால் விநியோக ஸ்தலங்களின் மேற்பார்வையாளர் அரசியல் தொடர்பற்றவர்களாக இருக்கவேண்டுமென்றும் இந்த பால் விநியோக முறைகள் நிருத்தியமைக்கப்பட வேண்டுமென்றும் உணவு இலாகா திருத்தியமைக்கப்பட வேண்டுமென்றும் சபையில் தெரிவிக்கப்பட்டது. இவற்றின்பின் சபை நடவடிக்கை திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.

பாராளுமன்றம் நேற்றுக் காலை 10 மணிக்கு சபாநாயகர் திரு ஏ. எப். மொலமுரே தலைமையில் ஆரம்பமாயிற்று.

திரு பி. ஜி. பி. கெனமன் உள்நாட்டு மந்திரியின் பாராளுமன்றக் காரியதரிசியிடம் கீழ்க்கண்ட கேள்வியைக் கேட்டார்:

(அ) யுத்த காலத்தில் புரிந்த சேவைகளுக்காக இலங்கை போலிஸ் படையின் குறைந்த உத்தியோகத்தருக்கு நன்கொடையாகவோ அல்லது போனஸாகவோ கொடுப்பதற்குபிரிட்டிஷ் அரசாங்கம் இலங்கை அரசாங்கத்துக்கு எவ்வளவு பணம் கொடுத்துள்ளது?

(ஆ) இப்பணத்தை குறைந்த போலிஸ உத்தியோகஸ்தருக்கு அரசாங்கம் நேரடியாக விநியோகிக்கப் போகிறதா?

(இ) அப்படி யில்லையாயின் வேறு எவ்விதம் அப்பணத்தை விநியோகிக்க ஆலோசிக்கப்பட்டுள்ளது அந்த தீர்மானங்களை போலிஸ படையின் குறைந்த பதவிகளில் உள்ளவர்கள் வரவேற்கின்றனரா?

இவற்றுக்கு முதலியார் காரியப்பர் பதிலளித்ததாவது:-

(அ) பிரிட்டிஷ் அரசாங்கம் கொடுத்த பணம் பற்றி இந்த இலாகாவுக்கு ஒன்றும் தெரியாமாட்டாது. (முதலாவதற்கு கூறிய பதிலின்பின் ஆ. இ பதில் அளிக்கப்படவேண்டியதாக இல்லை யென்று தெரிவிக்கப்பட்டது)

இதன் பின் திரு பீட்டர் கெனமன் இவ்விஷயம்பற்றி வேறு மந்திரிகளுக்கு தெரிந்திருக்கிறதா? அல்லது அவர்களுக்கு இந்த பணம் வந்திருக்கிறதா வென்று கேட்டதற்கு உள்நாட்டிலாகா பாராளுமன்ற காரியதரிசி, அவ்விஷயம் பற்றி மற்ற இலாகாக்களை கேட்க வேண்டுமென்று தெரிவித்தார். திரு தஹநாயகாகேட்ட ஒரு கேள்விக்கு முன்னறிவித்தல்வேண்டுமென்றும் அவர் தெரிவித்தார்.

இதன் பின் வரவு செலவு திட்டம் கமிட்டி முறைப்படி தொடர்ந்து விவாதிக்கப்பட்டது.

திருஷிக இலாகா (பகுதி 73) மான்யம் ரூ 13,151,058 சம்பந்தமாக விவாதம் நடைபெற்றது. கிருஷிக வேலைகள் அபிவிருத்தி, புதிய ஆராய்ச்சி திட்டங்கள், இலாகா அதிகாரிகள், முதலிய பல விஷயங்களும் விவாதிக்கப்பட்டன. டாக்டர் என். எம் பெரேரா பல திருத்தப் பிரேரணைகளையும் கொண்டுவந்தார் ஆராய்ச்சி சம்பந்தமாக கொழும்பிலே ஒரு ஆராய்ச்சி சாலையை ஸ்தாபிக்கும் செலவுக்கு ஒதுக்கப்பட்ட மான்யத்தை ரத்துச் செய்யும்படி டாக்டர் பெரேரா கூறியபோது, திரு சேனாநாயக்கா, அந்த ஆராய்ச்சிசாலை அமைப்பு முக்கியமென்று கூறினார்.

திரு கீர்த்திரத்ன (கேகாலை) பேசுகையில் பல திட்டங்களையும் அமுல் நடத்த முன் அவற்றை நன்கு ஆராய்ந்தறிய வேண்டுமென்று கூறினார்.

ஆராய்ச்சி சாலையில் திட்டங்களை பரீட்சித்துப் பார்ப்பதன் மூலம் களனி கங்கையின் வேகத்தை அறிய முடியாதென்றும் வெள்ளப் பெருக்குத் தடைக்கு அணைகளை உயர்த்துவதால் மாத்திரம் நன்மை வந்துவிடாதென்றும் திரு ராபர்ட் குணவர்தன கூறினார். நிதி மந்திரி கொண்டுவந்த திருத்த பிரேரணைகள் நிறைவேறின.

குளங்கள் திருத்தியமைப்பது சம்பந்தமாக உள்ள மான்யம் பற்றி டாக்டர் பெரேரா, திரு ராபர்ட் குணவர்தன ஆகியோர் பேசினர்.

திரு. ஹெராத் பேசுகையில் குளங்கள் திருத்தியமைப்பதில் இப்பொழுது கையாளும்முறைகள் திருத்தியமைக்கப்பட வேண்டுமென்றும், தனிப்பட்டவர்களிடம் இந்த திருத்த வேலைகளை கண்டிராக்ட் முறையில் கொடுக்கப்படாதென்றும் கூறினார்.

ஒவ்வொரு தொகுதியிலும் உள்ள அங்கத்தினர் அவ்வத் தொகுதிகளிலுள்ள திருத்த வேண்டிய சிறு குளங்கள் பற்றிய விபரங்களை அரசாங்க மாகாண அதிகாரியுடன் ஆலோசித்து ஜாபிதாக்களை மந்திரியிடம் சமர்ப்பிக்க வேண்டுமென்று சபாநாயகர் கூறினார் திரு சிவபாலன், திரு டபிள்யு. தஹநாயகா, திரு ஈ டபிள்யு. மதநேயு ஆகியோர் குளங்கள் திருத்தியமைக்கப்பட வேண்டுமென்பது பற்றி பேசினர். இவற்றுக்கெல்லாம் மான்யம் ஒதுக்கப்பட்டுள்ளதாக திரு டட்லி சேனாநாயக்கா கூறினார். திரு வி. குமாரசாமி பேசியதாவது:- வவுனியா பகுதியில் உள்ள சிறு குளங்கள் திருத்தியமைக்கப்படாமை காரணமாக அப்பகுதியிலுள்ள கிராம வாசிகள் அநேகர் வெளியேறிவிட்டனர். பூநகரி டிஸ்திரிக்கில் ஏராளமான சிறு குளங்கள் இருக்கின்றன. இவற்றை திருத்தியமைக்கவேண்டும். யாழ்ப்பாணத்தில் உள்ள ஏழை விவசாயிகளை நிலச் சுவான்தார்கள் சுரண்டுவதாக திரு சேனாநாயக்கா நேற்று பேசுகையில் குறிப்பிட்டார் இதற்கு திரு சேனாநாயக்காவே காரணம். இப்பகுதியில் உள்ள குளங்களை திருத்தியமைக்க அவர் ஏற்பாடுகள் செய்யாததினால் தான் நிலச் சுவான்தார்கள் ஏழை விவசாயிகளை சுரண்ட முடிகிறது.

குடியேற்றத்துக்கு ஒரு திட்டம்

யாழ்ப்பாணக் குடாநாடு ஜன நெருக்க முடையதாக இருக்கிறது. இங்குள்ள மக்களுக்கு குடியேற்றத்துக்கு வேறு இடம் வேண்டும். பூநகரி யாழ்ப்பாணத்துக்கு வெகு அண்மையில் இருக்கிறது. ஆங்கு ஒரு தகுந்த குடியேற்றத் திட்டத்தை ஆரம்பித்தல் வேண்டும்.

துணுக்காய் அபிவிருத்தி

துணுக்காய் பகுதியில் செழுமையான நிலமிருக்கிறது. இது விவசாயத்துக்கு ஏற்றதாகும் கிருஷிக வசதிகளின்மைகாரணமாக இப்பகுதி ஒரு வனாந்தரமாக இருக்கிறது. இங்கு வாழ்க்கை நடத்துவது மிக கஷ்டம். துணுக்காய் பிரதேசத்தின் அபிவிருத்தியை மந்திரி உடனே கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வவுனியா குளத்தை திருத்தியமைக்கவேண்டும். இது திருத்தியமைக்கப்பட்டால் வவுனியா பகுதி மிகவும் செழிப்புடையதாக விளங்கும்.

திரு டி. பி. சுபசிங்கா குளங்கள் திருத்தம் செய்யப்படுவது பற்றி பேசினார். நிதி மந்திரியின் திருத்தங்கள் நிறைவேறின இப்பகுதி மான்யம் முற்றிலும் நிறைவேறியது.

சொத்து மதிப்பு இலாகா (பகுதி 74) மான்யம் ரூ. 521,404 சம்பந்தமாக விவாதம் நடைபெற்றது. திரு சிவபாலன் பேசுகையில் இராணுவ உபயோகத்துக்கும் மற்றும் விஷயங்களுக்கும் எடுக்கப்பட்ட காணிகள் நஷ்டஈடு வழங்கப்படுவதால் உள்ள தாமதங்கள்பற்றி குறிப்பிட்டார். இவற்றை தாமதமன்னியில் வழங்க வேண்டுமென்றும் கூறினார்.

மேலும் அவர் பேசியதாவது:- இராணுவத்தின் உபயோகத்துக்கு எடுக்கப்பட்ட காணிகளுக்கு நஷ்டஈடு உடன் வழங்கப்படவேண்டும். பணமாக நஷ்டஈடு வழங்கப்படுவதுடன் காணிகளும் வேறு இடங்களில் வழங்கப்படவேண்டும். நஷ்டஈடு பெற்றவர்கள் பலர் தமக்கு அளிக்கப்பட்ட பணத்தைச் செலவிட்டுவிட்டனர்.

திரு ஜீ. ஜீ. பொன்னம்பலம் பேசுகையில நஷ்டஈட்டுத் தொகைகள் வழங்கப்படும் முறைகளின் மோசமான விலைபற்றி கண்டித்துப் பேசினார். டாக்டர் பெரேராவும் இதனை ஆதரித்துப் பேசினார். பிரதம சொத்து மதிப்பிடும் அதிகாரியின் சமபளம்பற்றி கமிட்டியில் திரு செல்வநாயகம் சுட்டிக்காட்டினார். இம்மான்யத் தொகை நிறைவேறியது.

விவசாயப்படை கமிஷனர் இலாகா (பகுதி 75) மான்யம் ரூ. 927,080 சம்பந்தமாக டாக்டர் பெரேரா பேசுகையில் விவசாயப் படையினரின் கடமைகள் இன்னதுதானென திட்டமாக அப்படையினருக்குத் தெரிவிக்கப்பட வேண்டுமென்றும் வேலைநிறுத்தங்களை முறியடிப்பதற்கு அவர்களை உபயோகிக்கப்படாதென்றும் கூறினார் திரு தஹநாயகாவும் இவ்விதமாகவே பேசுகையில் குறிப்பிட்டார். திரு ராபர்ட் குணவர்தன பேசியபின் திரு டட்லி சேனாநாயகா பேசுகையில் விவசாயப் படையின் பிரயோசனமான வேலைகள்பற்றியும் அப்படையில் இப்பொழுது 2185 பேர் இருப்பதாகவும் வேலைநிறுத்தத்தின்போது அவர்கள் புரிந்த சேவைகள்பற்றியும் கூறினார்

திரு ஜீ. ஜீ. பொன்னம்பலம் பேசுகையில விவசாயப்படையினரைப்பற்றியும் தேசத்தின் வேலையில்லாப் பிரச்னை நாளுக்குநாள் அதிகரித்து வருவது பற்றியும் கூறினார். இத்துடன் நேரம் 12 மணியானதால் மத்தியான இடைவேளைக்காக சபை நடவடிக்கை ஒத்திவைக்கப்பட்டது.

மத்தியான போஜனவேளைக்குப்பின் விவசாயப் படை கமிஷனர் இலாகா மான்யம்பற்றி விவாதம் தொடர்ந்து நடைபெற்றது. திரு கே. கனகரத்னம் பேசுகையில் விவசாயப் படையினால் ஏற்படும் நஷ்டங்கள் பற்றிக் குறிப்பிட்டார் தொடர்ந்து அவர் பேசுகையில் விவசாய வேலைகளை முதலில் இயந்திரமயமாக்க வேண்டுமென்றும் இப்படையின் எண்ணிக்கையை குறைக்கவேண்டுமென்றும் கூறினார்.

திரு டட்லி சேனாநாயகா பேசுகையில் இந்தப் படையினால் ஏற்பட்ட நஷ்டம்பற்றியும் இயந்திர வசதிகள் இல்லாது படையை இயந்திரமயமாக்க முடியாதென்றும் கூறினார் இம்மான்ய தொகை நிறைவேறியது.

உணவு-கூட்டுறவு இலாகா மந்திரி (பகுதி 79) மான்யம் ரூ. 168 974 சம்பந்தமாக விவாதம் நடந்தது திரு ஸ்ரீநிசங்கா பேசுகையில் உள்நாட்டு உணவுப் பொருள் கொள்வனவுத் திட்டத்தை நடத்தும் முறைபற்றி கண்டித்தார். சுய தேவைக்காக ஒரு கொத்து அல்லது இரண்டு கொத்து அரிசி எடுத்துச் செல்லும் மக்கள்மீது வழக்குத் தொடரப்பட்டு அபராதம் விதிக்கப்படுவதுபற்றியும், உள்நாட்டு நெல்லுக்கு அதிக விலையை அரசாங்கம் கொடுக்கவேண்டுமென்றும் இறக்குமதி செய்யப்படும் அரிசிக்கு அரசாங்கம் அதிக விலை கொடுக்கிறதென்றும் உள்நாட்டு உணவு உற்பத்தியை அபிவிருத்தி செய்ய முயற்சிக்கும் அரசாங்கம் உள்நாட்டு உற்பத்திக்கு ஏன் குறைந்த விலை கொடுக்கிறதென்பது பற்றி அறிய முடியவில்லையென்றும் அவர் மேலும் கூறினார்

திரு தஹநாயகா பேசுகையில் உணவுப்பொருள் சம்பந்தமான தூதுகோஷ்டிகளுக்கு ஏராளமான பணச் செலவு ஏற்பட்டதுபற்றி குறிப்பிட்டார்.

திரு ஜே. ஜே. பொன்னுண்டோ பேசுகையில் உள்நாட்டு விவசாயிகளுக்கு அவர்களுடைய அரிசிக்கு அதிக விலை கொடுக்கவேண்டுமென்று கூறினார். திரு பீட்டர் கெனமன் பேசுகையில் தேசத்தில் மூடப்பட்ட பல சங்கக் கடைகள் அரசாங்கத்தால் நடத்தப்படுவதாகவும் சங்கக்கடைகள் சரியான முறைப்படி நடத்தப்படவில்லையென்றும் திட்டமான கொள்கை இல்லையென்றும் நகரில் உணவு விநியோகத்துக்கு முனிஸிபல் டிப்போக்கள் திறக்கப்பட வேண்டுமென்றும் மொத்த விற்பனவு கூட்டுறவு ஸ்தாபன சங்கத்தின் திட்டத்தை உடனே அமுலுக்கு கொண்டுவரவேண்டுமென்றும் கூறினார்.

கூட்டுறவு ஸ்தாபனத்தின் சீர்கேடான முறைகள்பற்றி திரு டபிள்யு. பெரேராவும் கூறி

(4-ம் பக்கம் பார்க்க)

பர்மாவுக்கு நேருஜி விஜயம்

சுதந்திர தினத்தன்று செல்வார்

புதுடில்லி, டிச 19

பிரிட்டன் பர்மாவின் அதிகாரத்தை பர்மியரிடம் ஒப்படைத்துவிடும். பர்மா சுதந்திர தினமான ஜனவரி 4-ம் தேதியன்று இக்கொண்டாட்டத்தில் கலந்து கொள்ள இந்திய பிரதமர் பண்டித நேருஜிக்கு விஜயம் செய்வாரென்று அறியப்படுகிறது. பர்மாவின் பிரதமர் தக்கின் நூ இக்கு விஜயம் செய்தபோது பண்டித நேருஜிய அழைத்திருந்தார். தற்காலிகமாக இந்த அழைப்பை அப்போது இவர் ஏற்றுக்கொண்டார். (ராய்ட்டர்)

பர்மா சுதந்திரத்துக்கு நற்சகுனம்

கண்டுபிடிக்கப்பட்ட வெள்ளை யானை முதல் தலைவருக்கு பரிசு

ரங்கூன், டிச. 19

பர்மிய சுதந்திரத்துடன் முதல் தலைவராக தெரியப்படுபவருக்கு கீழ் பர்மா டிஸ்திரிக்கிலுள்ள காட்டில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு வெள்ளை யானையைப் பரிசளிக்க பர்மிய தலைவர்கள் ஆலோசித்துள்ளனர். பர்மா சுதந்திரத்தை அடையப்போகும் காலத்தில் இந்த வெள்ளையானை தோன்றியது பர்மாவின் நற்சகுனமே யென்று கூறப்படுகிறது. (ராய்ட்டர்)

நாஷனல் லொசிஞ்சர் பிஸ்கெற்

நல்ல அனுபவம் வாய்ந்தவர்களால் சுகாதார முறைப்படி தயாரிக்கப் பெற்ற

லொசிஞ்சர்களும், பிஸ்கெற்றுகளும்

பாலர் முதல் வயோதிபர் வரை விரும்புவது

எங்கள் நாஷனல் லொசிஞ்சர்களும், பிஸ்கெற்களுமே.

மொத்தமாகவும், சில்லறையாகவும் குறைந்த விலைக்கு எங்கும் கிடைக்கும்.

ஒருமுறை பரீட்சித்துப் பாருங்கள்!

நாஷனல் கொன்பெக்ஷனரி கம்பெனி,
489, பெரிய கோட, கழனியா.
டெலிபோன்: கழனியா 35.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
THE "SUTANTIRAN."
114, தர்மராஜா வீதி, கொழும்பு.
போன்: 3411.

ஆசிரியர் — மார்கழி மீ 6 ஞாயிற்றுக்கிழமை

தீபாவளிக்கு விடுமுறை

தீபாவளித் தினத்தை அரசாங்க விடுதலையாக்கும்படி சிரி சோணமலைப் பிரதிநிதி ஒரு தீர்மானத்தை பிரதிநிதிகள் சபையில் கொண்டு வருவார் என அறிய முடிகிறது. இந்துக்களின் பிரதான பண்டிகைகளில் தீபாவளியும் ஒன்று. சாதிபேதமின்றி, தோட்டி முதல் தொண்டமான் ஈறாக, பாலரும் வயோதிபரும், ஆண்களும் பெண்களும் ஒருமித்துக் கொண்டாடும் திருநாள் இதுவாகும்.

நான் தவறினாலும் இந்துக்கள் பஞ்சாங்கத்தின்படி திருநாட்களை தவறாது என்று சொல்லுவார்கள். அதற்குச் சான்று பகர்வது இவ்விழாவாகும். துவாபரயுகத்தில் கிருஷ்ணாவதாரத்தின் பொழுது நரகாசுரனை வதையுண்டான். அன்று தொடக்கம் இப்பண்டிகை ஆரம்பமாயது என்று புராணங்கள் கூறுகின்றன. நிறைமகன் நிறைவதாரம் செய்த தினத்தையே தீபவளியாகக் கொண்டாடுவதாகவும் ஒரு ஐதீகம் உண்டு. ஐப்பசி மாதத்தில் கார் அறுவடையாகின்றது. புதுக்தானியங்கள் வீட்டுக்கு வருகின்றன. ஆறு மாதங்களாக வியர்வை சிந்தி வேலை செய்தான் விவசாயி, தன் கஷ்டத்தின் பயனாகிய தானியக் குவியல்களை விளைந்தினோடு அநுபவிக்கும் தீபவளியை எதிர்பார்த்துக் கொண்டான். பழந்தமிழன் ஆகவே இவ்விழாவை விவசாயியினுடைய பெருநாள் என்றும் கூறுகின்றனர்.

காரணம் எதுவாக இருந்தபோதிலும் சால இந்துக்களும் கொண்டாடும் விழாவை அரசாங்க விடுதலை நாளாக ஆக்கி திருந்தமை முழுமையற்றதாகும். பௌத்தர்களின் "வெசாக்" போன்ற சிறுநாட்கள் அரசாங்க விடுதலை நாளாக்கப்பட்டுள்ளன. இந்துக்களின் கலாசாரமாகிய தீபாவளியையும் அரசாங்க விடுதலை நாளாக்குவது இலங்கையிலுள்ள அத்தனை இந்துக்களையும் மதித்ததாகும். இந்துக்கள் மாத்திரமல்ல, தமிழர்களே கௌரவிக்கப்பட்டதாகும்.

ஒன்றரை நூற்றாண்டுகளாக தமிழர் உறங்கியிருந்துள்ளார்கள். இனியாவது தங்கள் தேசீய விழாக்களைக் கொண்டாட முற்பட வேண்டும். அத்துடன் பௌத்தர்களும் மற்றவர்களும் இதனை மனதிற்கு எதிராக இருக்க மாட்டார்கள் என்றே நம்புகிறோம். திரு. வைரமுத்து தமிழ் மக்களின் நல்லாசியைப் பெறுவாராக.

பிரான்ஸின் பொருளாதார நெருக்கடி

அரசாங்கத்தின் புதிய நடவடிக்கைகள்

பாரிஸ், டிச 19

நாணயச் செலாவணிப் பெருக்கதாலும் விலைவாசிகளின் உயர்வாலும் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை சமாளிக்க பிரெஞ்சு அரசாங்கம் புதிய நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறது. நிதி மந்திரி அவைகளை பிரெஞ்சு பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார். வருடம் ஏழரை லட்சம் பிராங்குக்கு மேல் வருமானத்திற்கு விசேஷ வரி விதிக்கப்படும். 10 வருடத் தவணைக்கு கடன் எழுப்பப்படும்.

சமியூனிஸ்டு ஆதிக்கமுள்ள பிரெஞ்சு தொழிலாளர் சம்மேளனத்திலிருந்து சில தலைவர்கள் விலகி தனிமையாக தொழிலாளர் இயக்கம் நடத்த தீர்மானித்திருக்கிறார்கள்.

பொதுத் தேர்தல் நடத்தும்படி டிகால் கட்சியார் பாராளுமன்றத்தில் ஒரு தீர்மானம் கொண்டு வருவார்கள்.

வெண்ணெய் வரிக்குக் கண்டனம்

டாக்டர் குமாரன் ரத்னம் பேச்சு

கொழும்பு, டிச. 21

உணவுப் பொருட்கள் மீது வரி உயர்த்தும் புதிய பட்ஜெட் ஆலோசனைகளைக் கண்டிப்பதற்காக நேற்று மாலை பெளத்தமந்திரத்தில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. டாக்டர் குமாரன் ரத்னம் இங்கு பின்வருமாறு பேசினார்:—

"சுதந்திரம் என்பது வறுமையில் இருந்து விடுதலை தரவேண்டும். இல்லாது போனால் அது வெற்றுக் கூச்சலே! சுதந்திரம் கிட்டுவதாகக் கூறப்படும் இவ்வேளையில் எமது நாட்டில் உணவு, உடை, குடியிருப்பு ஆகிய பிரச்சினைகள் மிக உக்கிரமடைந்து எளியகுடிகளின் எமது நாட்டு பொது மக்களை பசிக்கும் வெறும் வயிற்றுடன் போதிய உடை வசதிகளும் இல்லாது வாடுகின்றனர். எமது நாட்டில் வெண்ணெய், வெண்ணெய்க் கட்டி, பழங்கள் உண்போர் 80,000 பேர் மட்டுமே என்று சொல்லப்படுகிறது. நான் இப்புள்ளி விபரங்களை ஆராய்ந்தேன். ஆனால் அதை உண்மையானது என்று அங்கீகரித்தாலும் அது சந்தோஷப்படத்தக்க காரியமல்ல. அதிக வரி விதித்து விதிப்பதற்குக் காரணமல்ல என்று நான் கூற விரும்புகிறேன். உண்மையில் எங்கள் மீளா வெட்கத்தில் அழுந்தப் போதிய காரணமிது. இந்த அவசிய உணவு பொருட்களை நமது நாட்டில் 30 லட்சம் பேர் சாப்பிடும்வரை நாம் சந்தோஷம் அடைய முடியாது. பாலே உணவுகளில் சிறந்தது ஆனால் குழந்தைகளுக்கு போதுமான பாலே கொடுக்கும் நிலை இல்லை. ஐரோப்பிய தேயிலை முதலாளிகளுக்காகப் பரிந்து உதவி செய்து வருகிற அரசாங்கம் பலர் வாழ்வுக்கு பால், வெண்ணெய் வெண்ணெய்க் கட்டி, முட்டை ஆகிய வகைகள் தர முன்வந்தால் அவர்கள் தேயிலைக்கு விலை பெருகுவதோடு, நாடும் மகிழ்ந்த உதவியும் பிரஜைகளாக அவர்கள் வளர்வதும் சாதகமாகும்.

தலைவர் ஸ்டான்லி டி சொய்சா பேசுகையில் இலங்கைக்கு இறக்குமதியாக்கப்படும் பசுவெண்ணெய் குதிரைகள் மீது அதிக வரி விதிக்க வேண்டும் என்று வற்புறுத்தினார்.

ஜி. பி சேனரத்ன, எல். டபிள்யூ. பண்டித, செல்வி ஏ. டபிள்யூ. ஆரியவதி, மார்டின் சில்வா, டி. ஏ பெரேரா முதலியோர் அதன்பின் பேசினார்கள். நிதி மந்திரி திரு ஜே. ஆர் ஜயவர்த்தனா அதனை பின்வரி விதிப்பது உயர்த்தப்பட வேண்டியதற்கு அரசாங்கத்தின் காரணங்களை எடுத்துச் சொன்னார்.

ஐரோப்பிய சமாதானம் ஏற்படாது

அமெரிக்க அத்திய நாட்டு மந்திரி பிரலாபம்

வாஷிங்டன், டிச 19

நாஸ்வர் மகாநாடுக்கு விதியம் செய்திருந்த அமெரிகக அத்திய நாட்டு மந்திரி மார்ஷல் இன்று லண்டனிலிருந்து இவ்வூர் திரும்பிவந்தார். நாஸ்வர் மகாநாட்டின் முறிவுபற்றி அவர் பின்வருமாறு தெரிவித்தார்:—

ஐரோப்பிய மீட்சித் திட்டம் வெற்றியடைந்து, அதன் நோக்கம் முழுமை கமியூனிஸ்டுகளின் முயற்சி தோற்கடிக்கப்பட்டால் ஒழிய ஐரோப்பாவில் சமாதானம் ஏற்படாது. ரஷ்யாவின் முட்டுக்கட்டையினால் தான் மகாநாடு முறிந்தது. ஐக்கியமான ஜெர்மனியை நாம் உருவாக்க முடியாது. நமது செல்வாக்குள்ள ஜெர்மன் பிரதேசங்களை மட்டுமே இன்னாம் ஐக்கியப்படுத்த முடியவேண்டும்.

மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது

கொழும்பு டிச 20

பொமிரியங்க சிமியன் பெரேரா, புஞ்சி வெடிகாரன் சீமன் என்னும் இருவர் மீது விதிக்கப்பட்ட மரணதண்டனை வெளிக்கடை சிறைச்சாலையில் 17-ம் 18 ந் தேதிகளில் நிறைவேற்றி வைக்கப்பட்டது.

அரசியல் அடிவானத்திலே!

"காண்டீபன்"

1948-ம் ஆண்டு மாசி மாதம் நான்காம்தேதி சுதந்திரப் பொதுநலம் சோஷலிஸக் குடியரசுகளிலிருந்து முழுச் சுதந்திரமும் கொடுக்கப்பட்டது. இந்தியா சுதந்திர நாடாகச் சென்ற ஆண்டு மாதம் 15 ம் தேதி பெற்றுவிட்டது. ஆனால் அந்தச் சுதந்திரத்தை நாம் பயன்படுத்த தேவையான அக்கறை வேறு எந்தத் தலைவருக்கோ சுதந்திரம் கொடுபடவில்லை.

உண்மையில் இலங்கைச்சுதந்திரப் போர்வீரர் சேனாநாயக்கா ஒரு புதிர்தான். டண்டிச நேருவுக்கோ பாகிஸ்தான் சிருஷ்டிகர்த்தா ஜின்னாவிற்கோ கிடைக்காத விசேஷ பெருமை — சுதந்திர தினத்தை நினைவிக்கும் பெருமை — நவீன பராக்கிரமவாகுவிற்குக் கிடைத்திருக்கிறதே!

காரணம்: இந்தியாவிற்குக் கொடுக்கப்பட்டது சுதந்திரம் ஆகவே கொடுப்பவருக்கும் வாங்குபவர்கள் இருபகுதியினருக்கும் வசதியாகவும் புதுமந்திரிகள் பொறுப்பேடுக்கவும் சிரமாகம் நடத்தவும் வசதியாகவும் இருக்கும் தினம் சுதந்திர தினமாக நிர்ணயிக்கப்பட்டது.

இலங்கையிலோ ஒரு சுதந்திரமும் கொடுபடவில்லை. கண்ணுக்குத் தோற்றக் கூடிய ஒரு மாற்றமும் நடக்கவில்லை. சுதந்திரம் என்று பிரகடனம் செய்ததுதான். இலங்கையில் சுதந்திர தினம் என்பது "சுதந்திர" கொண்டாட்ட தினம். இந்தியாவில் நடைபெற்றது சுதந்திர தினம்.

* * *

மாதா பிச்சை எடுத்துச் சீவனம் செய்தாள். மகன் ஆயிரம் வந்தணர்க்கு அன்னதானம் முடிப்பான். மாதா மரிக்கத் தனதன்று மட்டும் சகல வேடிக்கைகளுடனும் நடக்கிறது. செய்வார் மகன் என்ற மாதிரி இருக்கிறது இலங்கைக்குக் கிடைத்த சுதந்திரத்தை கொண்டாடுவதற்கு யூ. என். மந்திரிமார் எடுக்கும் நடவடிக்கைகள். எட்டு லட்சம் ரூபாய் சுதந்திரச் சடங்குச் செலவு. சில காலங்கட்குமுன் மந்திரியார் ஜார்ஜ் டி சில்வா "நாங்கள் நல்ல பணக்காரர்கள்" என்று சொன்னது ஞாபகத்திற்கு வருகிறது. இலங்கையில் எத்தனை லட்சம்பேர் பட்டினி கிடக்கிறார்கள் நெல் அரிசிச் சோற்றை எத்தனை கிழமை ஏழைக் காணுமல எத்தனை ஆயிரம் பேர் இருக்கிறார்கள். எத்தனையாயிரம்பேர் படுத்தபடுக்க வீடில்லாமல் அலைகிறார்கள் என்பது எங்கள் மந்திரிமார்கள் கனவிலும் தோற்றவில்லை. எட்டு லட்சம் ரூபாய் வேண்டுமாம் சுதந்திரப் பெருநாள் கொண்டாடுவதற்கு! இல்லாத சுதந்திரம் எட்டு லட்சம் ரூபாய் செலவழிந்தால் கிடைக்குமென்று எண்ணமோ!

மாப்புளிந்தல் அப்பத்திற்கு நல்லது தானே.

* * *

நச்சன் பேர்க்கிறான் கடா இழக்கிறது!

உயர் திரு அருணாசலம் மகாதேவா அவர்கள் உயர்ப்பறந்து விமானமார்க்கமாக பிரயாணம் செய்து ஹாவனுவுக்குப்போகும் வழியில் லண்டனில் தங்கி இலங்கைப் பத்திரிகை நிருபர் ஒருவருக்குப் பேட்டி கொடுத்தாராம். அப்பேட்டியின்போது அவர் திருவாய் மலர்ந்தருளியது ஒரே ஒரு விஷயத்தைப்பற்றித்தான்! அதன் சாராம்சம் இதுவே! நான் விமான மார்க்கமாக பிரயாணம் செய்தது இதுதான் முதற்தடவை பிரயாணமிகவும் உல்லாசமாய் இருந்தது. இனிமேல் எப்போதும் விமான மார்க்கமாகப் பிரயாணம் செய்யவே விரும்புகிறேன்" என்பதே

ஆம்! பத்து முறையும் செய்யாய! அப்படித்தானா; செல்லும் செல்லாதது எல்லாவற்றிற்கும் செட்டியார் இருக்கிறாரே யூ. என். பி. மாதலையா சேனநாயகக்கா! வரியிறுப்பாரை வதைத்து பன்னிராயிரத்து அறுநூறு ரூபாய் மகாதேவா மனைப்பராகப் போகும் பயணச் செலவிற்கு என்று அவர் நாபாகடாட சமைசெய்யத் தயாராயிருக்கும் வரையும் உல்லாசப் பயணத்திற்கு என்ன கடை?

"நச்சன் பேர்க்கிறான்! கடா இழக்கிறது
எனக்கு எனை நட்டம்!
ஊரார் வீட்டு நெய்யே
என் பெண்டாட்டி கையே"

என்று முன்னோர் சொன்ன வாக்கிற்கு தற்காலத்தில் உதாரணம் இல்லாமலா போகமுடியும்?

வெட்டொன்று துண்டு இரண்டு

திருசைமன அபெய விக்கிரமா என்பவர் யூ என். பி யில் உள்கட்டிக் ஊடாடுபவர் திருகொத்தலாவலையின் அதிருப்தி தோழர் யூ என். பி தலைவர்கள் மறைமுகமாக நின்று செய்விக்கவிரும்பும் கருமங்களை எல்லவற்றையும் தான் முன்நின்று செய்து கொடுப்பார்.

இவருடைய சேவைக்குப் பிரதியுபகாரமாக இவருக்கு ஒரு டாராளுமன்றக் காரியதரிசி என்ற நாமமுண்ட பதவியைக் கொடுத்துவைத்தனர். திருசேனநாயக்கா! இவர் எப்போதாவது சேர் நாயக்கா கொத்தலாவலை வர்க்கத்தினருக்கு மாறாக பேசுவது கிடையாது. கொத்தலாவலையர்கள் தூளி என்றால் இவர் நிறதூளியென்பார்! ஆனால் இம்முறை என்ன மர்மமோ தெரியவில்லை! வெட்டொன்று துண்டு இரண்டு என்று வெளுத்துவாங்கியிருக்கிறார் யூ. என் பி. அரசாங்கத்தை! "வரவு செலவுத் திட்டத்தின் பேரில் விவாதத்து வரிகளை நான் ஆதரிக்க வில்லை. கட்டாயத்தின் பிரகாரமே அவற்றிற்குச் சாதகமாக வாக்குக் கொடுக்கிறேன்" என்று பேசியிருக்கிறார்.

சொல்லாதிருக்கக் குறிப்பாலுணர்ந்து மனமாரப் பணிசெய்த பலவருஷச் சேவைக்குப் பதிலுபகாரம் பாராளுமன்றக் காரியதரிசிப் பதவி யல்லவா?

* * *

விவாத விநோதத்திற்கு வரியிலக்கியா?

நிதிமந்திரியார் பிரகடனம் செய்த புது வரிகளுள் இன்னும் ஒரு வரியைச் சேர்த்துக் கொள்ளாது ஏன் விட்டார் என்று தான் அநேகர் வினவுகிறார்கள்.

சினிமாப் பார்ப்பவர்கள் நாடகங்கள் பார்த்து இன்புறுபவர்கள் எல்லோரும் தற்போது களியாட்டு வரியிறுக்கிறார்கள்

பாராளுமன்ற விவாதவினோதத்தைப் பார்ப்பவர்கள் ஏன் இந்தக் களியாட்டு வரியைக் கொடுக்கக்கூடாது?

அரசாங்க சபை நடக்கும் போது ஏறக்குறைய எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பொது மக்கள் தாம் விரும்பியவாறு போய் விவாததைக் கேட்கலாம்.

ஆனால் பாராளுமன்றப் என்று ஸதாபித்த பிற்பாடு "டிக்கற்" வேண்டும். மிகவும் சுலபமாக "டிக்கற்" பெற்றுப் பார்க்கும் பெருமக்களிடம் கள்யாட்டுவரியிற விடலாமே.

* * *

பத்து ரூபாவுக்கு சாராய யந்திரம்

இராஜ வாசல் முதலியார் காரியதரிசி பாராளுமன்றக் காரியதரிசிகளுள் ஒருவர். இவருடைய விசுவாசச் செயல்களை யூ என். பி தலைவர்களுடே பிடிக்கவில்லையென்று வதந்தி. இவர் "மேல வீட்டில்" அங்கத்துவம் வகிக்கும் உள்நாட்டு மந்திரியார் ஸர். ஒலிவர் குணதிலகாவிற்கு உதவிப் போவழி

இப்பெரியார் சபையில் அவிட்டு விடும் சாக்குகளை மிகவும் விநோதமாக இருக்கின்றன ஒரு சந்தர்ப்பத்தில் இவர் பேசிய விஷயத்தை அலசிப்பார்ப்போம்.

சர்க்கார் சாராயம் வடிப்பதற்கு ஒரு ஆலை ஸ்தாபிக்க முன் வந்திருக்கிறார்கள். இந்த வேலைத் திட்டத்தில் குறித்த வரவு செலவு வருடத்திற்கு பணம் செலவாகாது ஆயினும் யந்திரங்கள் ஓர்டர் செய்யும் வேறு விதமாக அடுத்த வருடத்தில் செலவாகும் கருமைகளை ஏற்கவும் அறுமதி பெறும் நோக்கமாக சங்கற்பப் பணம் ரூபாய் பத்துக்கு அனுமதி கோரியிருந்தனர். இவ்வாறு சங்கற்பப்பண அநுமதி கோருவது வழக்கம்.

இவ்வாறு சங்கற்பப் பணமாகச் சமர்ப்பிக்கப்படும் தொகைக்கும் அவ்வத் திட்டத்திற்குச் செலவாக இருக்கும் தொகைக்கும் ஒரு தொடர்பு இல்லை. குறித்த வருடத்திற்கு பணம் செலவாக வேண்டியிலாதபடியால் சங்கற்பமாக ரூபாய் பத்துக்கு அநுமதி கோரியிருந்தது.

இந்தப் பிரச்சினை விவாதத்திற்கு எடுபட்டபோது டாக்டர் ஏன் எம் பெரேரா இந்தத் திட்டத்தில் பூராவாக எவ்வளவு பணம் செலவாகும் என்று கேட்டார். முதலியார் ரூபாய் பத்து என்று பளிச்சென்று பதிலளித்தார். பத்து ரூபாய் செலவோடு முதலியார் சாராயம் வடிக்கும் ஆலையொன்று சமைப்பிக்கப் போகிறார்.!!!

இந்திய பாராளுமன்றம்

ஜனவரி 28-ந் தேதி அடுத்த கூட்டம்

புதுடில்லி, டிச. 19

இந்திய பாராளுமன்றத்தின் அடுத்த கூட்டம் 1948 ஜனவரி மாதம் 28-ந் தேதி கூடுமென்று தலைவர் அறிவித்திருக்கிறார்.

டில்லியிலிருந்து கடைசியாகப் புறப்படும் பிரிட்டிஷ் துருப்புகளின் கோஷ்டி இன்று பிரியா விடை பெற்றுக்கொண்டது இனி பம்பாயில் ஒரு பட்டாளமும் கராச்சியில் ஒரு பட்டாளமும் மட்டுமே எஞ்சியிருக்கின்றன.

இந்தியாவில் புதிய அரசியல் திட்டம் அமுலாகும்வரை லார்டு மவுண்ட்பேட்டன் கவர்னர் ஜெனரல் பதவியிலிருக்கும்படி இந்திய அரசாங்கம் பிரிட்டிஷ் அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டிருக்கிறது

காஷ்மீர் போர்

பூஞ்ச் நகரை வளைந்த எதிரிகளை இந்திய துருப்புகள் விரட்டியடித்தனர். சில எதிரிகளை யாண்டனர். மற்றவர்கள் காயமடைந்தனர் ஒரு இந்திய ராணுவப் பிரதிநிதி பின்வருமாறு விளக்கினார்:—

காஷ்மீர் சமஸ்தானத்தின் தென்மேற்கு மூலையிலுள்ள மீர்பூர் ஜில்லாவில் 8 வாரங்களாகப் போர் நடைபெற்று வருகிறது. அங்கு படையெடுத்த பலம் தாதியார் 5000 பெண்களை தூக்கச் சென்றார்கள். இந்திய துருப்புகளால் 141 பேர் மாண்டனர். 198 பேர் காயமடைந்தனர். எதிரிகளுக்கு இதைவிட இருபது மடங்கு சேதம் ஏற்பட்டுள்ளது. எதிரிகளில் 23 பேர்களை இந்திய துருப்புகள் கைதுசெய்தனர். இவர்களில் பட்டானியர்களும் பஞ்சாப் முஸ்லிம்களும் இருக்கிறார்கள். அந்நகரம் இந்திய துருப்புகளால் வசமிருக்கின்றது. எதிரிகள் வசமிருப்பதாக பாகிஸ்தான் ரேடியோ கூறியது பொய்.

பம்பாயில், ஒரு மத ஊர்வலத்தில் கலவரம் ஏற்பட்டபோது போலீஸார் தடியடிப் பிரயோகம் செய்தனர்.

ராணுவ உபயோகத்தில் உள்ள காணிகள்

பிரதமரிடம் தூதுக்கோஷ்டி

கொழும்பு, டிச. 20

தாழ்ந்த பிரதேச விவசாயிகளின் தூதுக்கோஷ்டி ஒன்று சென்டர் சார்ல்ஸ் ஏ. எம். டி சில்வா தலைமையில் நேற்று இலங்கைப் பிரதமரின் நிரந்தரக் காரியதரிசியை பேட்டிகண்டது பாதுகாப்புச் சட்டங்கள் நீடித்து, ராணுவத்தினர் பல தோட்டங்கள் காணிகளை மேலும் உபயோகித்துவருவது அவர்களால் பலமாக ஆட்சேபிக்கப்பட்டது. இவற்றை திருப்பி அதன் சொந்தக்காரருக்குக் கொடுக்கவேண்டும்; அல்லாதபட்சத்தில் இறைய நடப்பு விலைகளைக் கொடுத்து அரசாங்கம் அவற்றை விலைக்கு வாங்கவேண்டுமென்றும் அவர்கள் வற்புறுத்தினர்

யந்திரத்திற் சிக்கிய தொழிலாளியின் கரம்

முற்றுகப் பிய்க்கப்பட்டது

மொரட்டுவை, டிச 20

கொரளவெலகியில் உள்ள ஜீ. பெட்டித் தொழிற்சாலையிலே செய்யும் டபிள்யூ சார்ல்ஸ் என்னும் தொழிலாளி மிகக் கடுமையான விபத்துக்குள்ளாகியுள்ளார். ஓடுந்திரத்தில் வேலைசெய்துகொண்டிருந்த அவரது கரம் ஒருசக்கரத்தில் சிக்கிவிட அவரது தோளிலிருந்து முழுகுமுற்றாகப் பிய்க்கப்பட்டுவிட்டது. அவரது நிலைமை மிக ஆபத்தாக இருந்துவருகிறது.

ருமேனிய மன்னர் விவாகம் செய்ய அநுமதி கோருகிறார்

லூசேன், டிச. 18

ருமேனியாவின் மன்னரான மைக்கேல் போர்பன் பர்மாவிலுள்ள அன் என்னும் இளவரசியை மணஞ்செய்ய அநுமதிக்கும்படி தனது அரசாங்கத்தைக் கேட்டிருக்கிறார்.

அன் இளவரசியும் அவரது தாயாரான மார்ரெட் இளவரசியும் லூசேனிலிருந்து லக்ஸம்பர்க்குக்குப் பயணமாகினார்கள்

இவர்கள் இருவரும் மைக்கேல் மனைவியோடு லூசேனிலுள்ள ஒரு ஹோட்டலில் கடந்த இருவாரங்களாகத் தங்கியிருந்தனர். (ராய்டர்)

பட்டப்பகலில் தேனீர்க்கடையில் கொள்ளை

முகமாலைக் கிராமச் சங்கத் தலைவருக்கு 4 வருடச் சிறை

சாவகச்சேரி, டிச 19

பதனியிலுள்ள திருமுருகவேலு என்பவருடைய தேனீர்க் கடைபொன்றை சென்றமாதம் 28-ம் தேதி முகமாலை கிராமச் சங்கத் தலைவர் கோமாளி கந்தையர் என வழங்கும் கந்தையர் என்பவரும், ஞானராசா என வழங்கும் கனகசபை என்பவரும், அரசரட்னம், தியாகராஜா ஆகியவர்களும் உட்புகுந்து பேர்கள் கொள்ளையடித்து அவரிடமிருந்த பணம் ரூபாய் 500யும் எடுத்ததாகக் குறித்த முந்துவேலு என்பவர் மீதுக் கருமாதிகாரி திருஎஸ். ஸ்ரீவாசன் அவர்களுக்கும் சாவகச்சேரிப் போலீஸ் குடியாருக்கும் தகவல் கிடைத்ததுடன், சாவகச்சேரி போலீஸ் இன்ஸ்பெக்டர் திரு வி. முருகேசு அவர்களும் மீதிக் கருமாதிகாரி ஸ்ரீவாசன் அவர்களும் குறித்த இடத்திற்குச் சென்று எதிரிகளைக் கைது செய்து சாவகச்சேரி நீதி மன்றத்தில் ஆஜர் செய்து, எதிரிகள் மீது வழக்குத் தொடர்ந்த வழக்கு மார்கழி மாதம் 12-ம் தேதி விசாரணைக்கு எடுக்கப்பட்டது. சாவகச்சேரி நீதிபதி அன்று மாலை 7 மணிவரையும் விசாரணை செய்து முடிவில் எதிரிகளை குற்றவாளிகளாகக் கண்டு ஒவ்வொருவருக்கும் நான்கு வருடச் சிறைத் தண்டனை விதித்தார்

தண்டனை விதிக்கும் பொழுது கடைத் தெருவில், பட்டப்பகலில் இப்படிச் செய்தது பாரதூரமான குற்றமென்றும், இடையிலான செயல்களுக்கு மேலும் கடைபெருகுமாயிருந்தால் கடுந்தண்டனை விதிக்கப் போவதாக நீதிபதி கூறி, முதலாம் குற்றத்திற்கு ஆறு மாதமும், இரண்டாம் குற்றத்திற்கு இரண்டு வருடமும், மூன்றாம் குற்றச்சாட்டிற்கு ஆறு மாதமும், ஐந்தாம் குற்றச்சாட்டிற்கு ஒரு வருடமும், ஆறும் குற்றச்சாட்டிற்கு இரண்டு வருடச் சிறையும் வழங்கினார். இரண்டாம், ஏழு, குற்றச்சாட்டுகளுக்கு வழங்கிய தண்டனைகள் ஒன்றன் பின் ஒன்றாக அனுபவிக்கப்படவேண்டுமெனக் தீர்ப்பளித்ததுமாகும் நான்கு வருடச் சிறைத்தண்டனையை ஒவ்வொருவருக்கும் கொடுத்தார்.

அதுடன் பணக் கருமாதிகாரி ஸ்ரீவாசன் அவர்களையும், சாவகச்சேரி போலீஸ் இன்ஸ்பெக்டர் வி. முருகேசு அவர்களையும் இவ்வழக்கை திறமையாக நடத்தியதற்காக நீதிபதி மெச்சினார். (ந-மி)

ரயில் கொள்ளை

பாலஸ்தீனக் கலகம்

ஜெருசலேம், டிச 19

இன்றிரவு டிக்வா என்னுமிடத்தில் அராபியர்கள் ரயிலை நிறுத்தி 8 வண்டிகளிலிருந்த அரிசி, பார்லி, கோதுமை ஆகியவற்றைக் கொள்ளையடித்து லொறிகளில் ஏற்றிக்கொண்டு ஓடிவிட்டார்கள் 8 மணி நேரத்தில்நடைபெற்ற இரண்டாவது ரயில் கொள்ளை இது.

கீன் கிராமத்தில் 5 குழந்தைகள் உட்பட 10 அராபியர்களை நேற்றிரவு யூதர்கள் கொன்றனர். இச்சம்பவத்தின் காரணமாக காலிலி ஜில்லா வடபகுதியில் ஊரடங்குச்சட்டம் பிரயோகிக்கப்பட்டிருக்கிறது. ஹைபாவிலிருந்து லிட்டாவுக்குச்சென்று கொண்டிருந்த ரயில் ஆயுதந்தாங்கிய அராபியர்கள் நிறுத்தி அதிலிருந்த 85 டன் சீனியைக் கொள்ளையிட்டுச் சென்றனர்.

10 அராபியர்கள் கொல்லப்பட்டதைக்குறித்து அராபிய மேல் கமிட்டித்தலைவர் கண்டித்திருக்கிறார்.

பாலஸ்தீன பிரச்சினைபற்றி நாளை அந்நிய நாட்டு மந்திரி இன்றிரவு பிரிட்டிஷ் அந்நிய நாட்டு மந்திரியை லண்டனில் சந்திக்கப் பேசுகிறார்.

லண்டனில் வசித்து வரும் இந்தியா, பாகிஸ்தான், அரேபியா, எகிப்து, சிரியா, லெபனான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த மாணவர்கள் மகாநாடு கூடி, பிரிட்டனிலுள்ள முஸ்லிம்கள் பாலஸ்தீனத்தை நாசமாக அராபியர்களுடனும் போரில் கலந்து கொள்ள அனுமதி தரும்படி பிரிட்டிஷ் அரசினரைக் கேட்டுக்கொண்டனர். இந்தப்புனித யுத்தத்தில், இந்தியா, பாகிஸ்தான், சிலோன் ஆப்பிரிக்கா, மத்தியகிழக்கு நாடுகள் இவைகளிலுள்ள கோடிமுஸ்லிம்கள் அராபியர்களுடன் சேர ஆர்வமுடன் கனம் ஆராசாவைக் கேட்டுக்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டது.

கள்ளுப்போத்தல்கள் கொண்டு சென்ற இருவருக்கு அபராதம்

கம்பளை, டிச. 18

புசல்லாவ பகுதி தவுட்டுக்காமலைத் தோட்டத் தொழிலாளி பி கே. கருப்பையா சென்ற புதன்கிழமை கொத்தமலை கிராமத்திலிருந்து நான்கு கள்ளுப் போத்தல்களை வாங்கிக்கொண்டு சென்றதாக கம்பளை கலால் இலாக்கா அதிகாரியால் குற்றம் சாட்டித் தொடரப்பட்டிருந்த வழக்கு இன்று கம்பளை மாஜிஸ்திரேட்டன் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. எதிரி குற்றவாளியென ஒப்புக்கொண்டதின்பேரில் மாஜிஸ்திரேட் திரு—ப்ளியூ. டப்ளியூ. முத்துராஜா எதிரிக்கு ரூபாய் 40 அபராதம் விதித்தார்.

பிரஸதாப தோட்டத் தொழிலாளி இராமையா என்பவரும் நான்கு கள்ளுப்போத்தல்களை, மேற்படி கிராமத்திலிருந்து வாங்கிச் சென்றகுற்றத்திற்கு மாஜிஸ்திரேட் ரூ. 45 அபராதம் விதித்தார். இரு எதிரிகளும் அபராதத்தைச் செலுத்திவிட்டனர். [ந-மி]

ஸ்பெயினில் கமியூனிஸ்டுகள் மீது வழக்கு

மாட்ரிட், டிச 19

7 பெண்கள் உட்பட 28 கமியூனிஸ்டுகள் மீது ராணுவப் புரட்சி செய்ததாகச் சாட்டப்பட்டு தொடரப்பட்ட வழக்கு இன்று விசாரிக்கப்பட்டது. பிரபல ஸ்பெயின் கமியூனிஸ்டு அகஸ்டின் ஜோரோவாவுக்கு மரண தண்டனை விதிக்கும்படி அரசாங்க தரப்பு வழக்கறிஞர் வாதாடினார் எதிரிகளில் பலர் பிரான்ஸிலிருந்து வந்தார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாடகைக் கட்டுப்பாட்டு சட்டம்

ரத்தாக்கவேண்டும் என்று மகஜர்

கொழும்பு, டிச. 20

அகில இலங்கை சோனகர் சங்கத்தினர் சுகாதார ஸதலஸ தாபன மந்திரியாருக்கு ஒரு மகஜர் சமர்ப்பித்துள்ளனர். அதில் அவர்கள் வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டம் வீட்டுச்சொந்தக்காரர்களுக்கு அதிக கஷ்டத்தைத் தருவதாகவும் ஆகவே அது ரத்தாகப்படவேண்டும் என்றும் கூறியுள்ளனர்.

மேற்கு ஜாவாவுக்கு ஒரு அரசாங்கம்

பட்டேவியா, டிச. 19

மேற்கு ஜாவாவுக்கு ஒரு அரசாங்கம் நிறுவ மேற்கு ஜாவா பிரமுகர்கள் மகாநாடு நிர்மாணித்தது. இதன் ஜனத்தொகை 120 லட்சம் இது முன்னை இந்தோனேஷியா குடியரசைச் சேர்ந்தது. டச்சு துருப்புகள் சமீப யுத்தத்தில் இதைக் கைப்பற்றின. இந்தோனேஷியா வலுட்சி அரசாங்கம் ஏற்படுத்தும் புதிய சமஷ்டியில் இது ஒரு பகுதியாக இருக்கும்.

ரிஷி ரிஜிஸ்டர்/

நேத்திரசஞ்சீவி நாதலம்

T.D.மகுரநாயகம் அன்கோ

ஞானசுந்தரா வைத்யசாலை

தபால்பெட்டி 669 — 187, ரிசட்டியார் வீதி, கொழும்பு....

தமிழ் விருத்திப் போட்டி நிர். 9.

பரிசு ரூபா 2250-00

1-ம் பரிசு ரூபா 1000-00	1-ம் போனஸ் பரிசு ரூபா 100-00
2-ம் பரிசு ரூபா 500-00	2-ம் போனஸ் பரிசு ரூபா 50-00
3-ம் பரிசு ரூபா 250-00	3-ம் போனஸ் பரிசு ரூபா 30-00

அநுதாபப் பரிசு ரூபா 100-00

பொங்கல் விசேஷப் பரிசு ரூபா 220-00 (சைக்கிள் வண்டி) விசேஷப் பரிசு: இந்தப் போட்டியில் ரூபா (4-00) நாலுக்கும் அதற்குமேற்பட்ட தொகைக்கும் கூப்பன்கள் அனுப்பியவர்களின் பெயர்களை எழுதிச் சீட்டுக் குலுக்கப்படும். அதில் முதலாவதாக வருபவருக்கு புதுமாடல் புதிய சைக்கிள் வண்டி ஒன்று பரிசளிக்கப்படும்] இதற்கிட்டத்தில் பரிசு பெற்றோர் பெறுவோர் அனைவரும் சேர்க்கப்பெறுவர். 25-12-47 தொடக்கம் பேற்படி சைக்கிள் வண்டியை எமது காரியாலயத்தில் பார்வையிடலாம்.

பிரவேசக் கட்டணம்: ஒவ்வொரு கூப்பனுக்கும் சதம் 50, (அணா 8) ரூபா நாலு (4-00) க்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் கூப்பன்கள் அனுப்புவோர் தாம் அனுப்பும் கூப்பன்களின் தொகையைப்போல் இன்னுமொரு டங்கு பிரவேசக் கட்டணமின்றி அனுப்பலாம். கூப்பன்கள் தனிக் காகிதத்திலும் தயாரித்து அனுப்பலாம். அத்தகக் கூப்பன்கள் வேண்டியோர் எமக்கு எழுதக. இலவசமாய் அனுப்பிவைக்கப்படும்.

பொ	ங்	க	ல்
■	■	2	மி
3 ஆ	து		ன்
■	4 அ		சி
■	■	5	ட
■	6 பொ		மை
■	7	ன	ம்
8 ஓ		று	மை
■	■	9	சி
■	10	ர	ன்

குறிப்புகள்

1. பொங்கோ பொங்கல்!!!
2. தை பிறக்கிறது! எமது நேயர்கள் அனைவருக்கும் இது பிறக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கிறோம்
3. பால் பொங்கும்போது இவனை வணங்குவது இந்துக்கள் வழக்கம்
4. இதன் விலை சிறிது தளர்ந்திருப்பதால் பண்டிகை விசேஷமாய்த்தானிருக்கும்
5. பொங்கலின்றுகண்டா ஆனம் ஆனதும் புரிய.....அனைவர் பெண்கள்.
6. மனித குணங்களிலொன்று.
7. 'வானம் தானையா.
8. "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு நம்மில் .....நீங்கில் அனைவர்க்கும் தாழ்வு"
9. அரசனையும்ஆண்டியாக்கிவிடுவாள் இவள்
10. இவளைப் பார்க்கும்போதே சிறிது பயமுண்டாகத்தான் செய்யும்.

முடிவு தேதி 16-1-48

சரியான விடையும், பரிசுபெற்றோர் விபரமும் 23-1-48 வீரகேசரியில் வெளிவரும்.

தமிழ் விருத்திப் போட்டி நிர். 9

பெயர் .....

விலாசம் .....

M. O or P O No .....

இளங்கோவன் [பதிப்பகம்

123, நோறிஸ் ரோடு, கொழும்பு.

வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!!

தமிழ் விருத்தி போட்டி நிர். 9 க்கு

'போட்டித் தூதன்'

விடை விமர்சனம் வெளிவந்துவிட்டது!!!

"லோலன்" கப்பன் சான்சும் ஸ்ரீமதி "சாரதா" கூப்பன் செலக்ஷனும், பொங்கற் போட்டி "சிவாஸ்" விசேஷ கூப்பன் செலக்ஷனும் அடங்கியது. விலை சதம் 25. 50. சதம் போஸ்டல் ஓடர் அனுப்பி இரண்டு தடவைக்குரிய விமர்சனம் பெற்றுக்கொள்ளுங்கள்.

போட்டி லோலன் காரியாலயம்,

உடுவந்தன்னை.

நமது ஜோலிப்பகுதி:

ஜெர்மனியின் எதிர்காலம்

['சுகன்யா' எழுதுவது]

உலகம் முழுவதையும் ஆள வேண்டுமென்ற எண்ணத்துடன் இரண்டாம் மகாயுத்தத்தைக் கிளப்பிய ஜெர்மனி இன்று அயல்நாடுகளால் பிரிக்கப்பட்டு அரசாங்கம் நடைபெறும் ஜெர்மனி முன்போல் வலுவரசாய் வருமோ என்பதைக் கிரகமூலமாய் ஆராயுமிடத்து ஜெர்மனி மேடராசியால் ஆளப்பட்டு வரும் நாடு. மேடராசியின் அதிபன் செவ்வாய். 1940-ம் ஆண்டுடன் செவ்வாயின் காலம் முடிந்து சனியின் கால மேற்பட்டது. செவ்வாயின் காலத்திலேயே இரு மகாயுத்தங்களும் நடைபெற்றது. செவ்வாயின் காலமாதலால் ஜெர்மனி முதலாம் யுத்தத்தின் பின்னும் அதிக பலம் பெற்று இரண்டாம் யுத்தத்தைக் கிளப்பியது. இரண்டாம் மகாயுத்தத்தில் சனியால் ஆதரிக்கப்படும் நாடாகிய ரூசியாவாவால் அழிக்கப்பட்டது.

ஜெர்மனியின் உதயராசியாகிய மேடத்தில் ராகுபகவான் 1949-ம் ஆண்டு நடுப்பகுதிவரைக்கு வசிப்பார். மேடராகு காலம் ஜெர்மனியின் முன்னேற்றங்களுக்கு பல தடைகளாயிருக்கும். இந்தக்காலத்தில் உள்நாட்டுப் புரட்சிகளும் பஞ்சப் பிணியும் பல கட்சிகள் தோன்றி மறைதலும் அந்நியரின் தொல்லைகளுமுண்டாம். ஜெர்மனியிலும் ஜனநாயகக் கட்சியே செலுமடையும். பொதுவுடைமைக் கட்சியார்களின் தொல்லைகள் சிகரிக்கும்.

19.8-ம் ஆண்டு பெப்ரவரி மீ 12-ம் தேதிவரைக்கும் வியாழன் ஜெர்மனியின் உதயராசிக்கு அஷ்டமத்திலிருப்பார். இந்தக்காலம் வரைக்கும் ஜெர்மனியில் பல தொல்லைகளும், பஞ்ச பிணியும், உள்நாட்டு கலாச்சிகளும், அன்னியரின் தொல்லைகளுமுண்டாம். இந்தக்காலத்தில் ஜெர்மனியில் அந்நியரின் ஆதிக்கம் நடைபெறும் 1948-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 12-ம் தேதி தொடக்கம், வியாழபகவான் ஜெர்மனியின் பாக்கியஸ்தானத்திலிருப்பார். இந்தக் காலத்தில் ஜெர்மனி அந்நியரின் ஆதிக்கத்தினின்றும் விலகத்தப்படும். 1948-ம் ஆண்டில் ஜெர்மனியில் சுயஆட்சி நடைபெறும். ஜனநாயகக் கட்சியின் அரசாங்கமே நடைபெறும், கும்பராசி காலமாதலால் ஜெர்மனி முன்போல் பலம் பெற்ற இராட்சியமாயேற்படாது. ஜெர்மனி ஓர் சிற்று நாடாய், வளங்கும்.

இந்த வாரத் தினப்பலன்

ஞாயிறு டிசம்பர் 21 நவம் இன்று மதாஷ தினமாதலால் புதுக்கருமங்கள் ஆரம்பம் செய்யப்படாது.

சந்திரலக்னம் இடபம், மிதுனம், கன்னி, தனுசு, மகரம் மீனராசிகளில் பிறந்தவர்களுக்கு இத்தினத்தில் நற்பலனுண்டாம்.

திங்கள் டிசம்பர் 22 இன்று புதுக்கருமங்கள் ஆரம்பிப்பதற்குத் தோஷதினம்.

சந்திரலக்னம் இடபம், மிதுனம், கன்னி, தனுசு, மகரம் மீனராசிகளில் பிறந்தவர்களுக்கு இத்தினத்தில் முன்னேற்றமுண்டாம்.

செவ்வாய் டிசம்பர் 23. இன்று கொள்ளல் விற்றலுக்கும் பிரயாணத்திற்கும், மரவகை செடிவகை நடுவதற்கும் பொதுநாள்.

சந்திரலக்னம்-மேடம், மிதுனம், கடகம், துலாம், விருட்சிகம், மீனராசிகளில் பிறந்தவர்களுக்கு இன்று பணப்பேறுண்டாம்.

புதன் டிசம்பர் 24. இன்று புதுக்கணக்குப் பதிதலுக்கும், கொள்ளல் விற்றலுக்கும், வியாபாரம் செய்வதற்கும், பிரயாணத்திற்கும், கொண்டாட்டங்களுக்கும் விசேஷ தினம்.

சந்திரலக்னம்-மேடம், மிதுனம், கடகம், துலாம், விருட்சிகம், மீனராசிகளில் பிறந்தவர்களுக்கு இத்தினத்தில் வெற்றிகளுண்டாம்.

வியாழன் டிசம்பர் 25. மரணயோகம் இன்று எல்லாக் கும்பங்களுக்கும் தோஷதினம்.

சந்திரலக்னம்-இடபம், கடகம், சிங்கம் விருச்சிகம், தனுசு மீனராசிகளில பிறந்தவர்களுக்கு இத்தினத்தில் சேதமுண்டாம்.

வெள்ளி டிசம்பர் 26 மரணயோகம். இன்று எல்லாக் கும்பங்களுக்கும் தோஷதினம்.

சந்திரலக்னம்-இடபம், கடகம், சிங்கம், விருச்சிகம், தனுசு மீனராசிகளில பிறந்தவர்களுக்கு இத்தினத்தில் ஜெயமுண்டாம்.

சனி டிசம்பர் 27. பூரணை இன்று பொதுக் கும்பங்கள் ஆரம்பிப்பதற்கு பொதுநாள் சந்திரலக்னம்-மேடம், மிதுனம், சிங்கம், கன்னி தனுசு மகரராசிகளில் பிறந்தவர்களுக்கு இன்று சுக பலனுண்டாம்.

டச்சுக்காரருக்கு பண்டிதநேரு புத்திமதி

பிரிட்டனைப் பின்பற்றி இந்தோனேஷியாவுக்கு சுதந்திரம் வழங்குக

பட்டேவியா, டிச. 17

சமரசபேச்சு நடத்தும் இந்தோனேஷிய தூதக்கோஷ்டிக்கும் டச்சு தூதக்கோஷ்டிக்கும் இந்தியா பிரதம மந்திரி பண்டித ஜவஹர்லால்நேரு ஒரு செய்தி அனுப்பியிருக்கிறார்

"பிரிட்டனிடமிருந்து இந்தியாவுக்கு அமைதியாக அதிகாரம் மாற்றப்பட்டது போல இந்தோனேஷியாவுக்கும் மாற்ற இந்தோனேஷிய நண்பர்களும் டச்சு நண்பர்களும் பாடுபடவேண்டும்" என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார். பட்டேவியாவில் இந்திய ஸ்தானிகராக உள்ள ஸ்ரீ என். ராகவன் இரு தூதகோஷ்டியினருக்கும், ஐ.நா. நல்லெண்ணக் கமிட்டி அங்கத்தினர்கள். டச்சுக் சிழக்கு இந்தியத் தீவு லெப்டிணெண்ட் கவர்னர் ஜெனரல் டாக்டர் ஹீயூபாட்டன் வான்மூக் ஆகியவர்களுக்கும் ஒரு விருந்து நடத்தியபொழுது பண்டித நேருவின் செய்தியைப் படித்தார்.

பர்மாசுதந்திரவிழாவுக்கு இலங்கைப் பிரதிநிதி

திரு. பண்டாரநாயக்கா செல்வார்

கொழும்பு, டிச. 20

இனவரி 4-ம் தேதி தொடக்கம் 7-ம் தேதிவரைக்கும் நடக்கிறகும் பர்மா சுதந்திர விழாவின் போது இலங்கைப் பிரதிநிதியொருவரை அனுப்புதல்வேண்டும் என்று பர்மா அரசாங்கத்தின் சார்பில், பர்மாவின் அயல்நாட்டு மந்திரி ஊ. டின்டுட இலங்கை அரசாங்கத்துக்கு ஒரு அழைப்புத் தந்தி அனுப்பியிருந்தார். அதற்கு இலங்கைப் பிரதமரும், அயல்நாட்டு விவகார மந்திரியுமான திரு. டி. எஸ். சேனாநாயக்கா அனுப்பியுள்ள பதிலில், சுகாதார கூலவஸதாபன மந்திரி திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா இலங்கையின் பிரதிநிதியாக சமுகமளிப்பார் என்றும் அவருடன் அவரது நிரந்தரக் காரியதரிசி ஈ. டபிள்யூ. கன்னங்கரா செல்வாரெனவும் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விருவருடன் பண்டாரநாயகாவின் அந்தரங்கக் காரியதரிசியும் செல்வார். பாவரும் பர்மா அரசாங்கத்தின் விருந்தினர்களாக இருப்பர்.

பாரீசுக்கு புதிய பிரதம மந்திரியும் ராஜிநாமா

டெஹ்ரான், டிச. 19

நேற்று பிரதம மந்திரியாக நியமிக்கப்பட்ட சர்தார் ஹெக்மத் இன்று ராஜிநாமா செய்துவிட்டார். பாரசீகம் ஒரு வாரகாலமாக மந்திரி சபையின்றி இருக்கிறது.

புதிய இத்தாலிய மந்திரி சபை

ரோமாபுரி, டிச. 19

இன்று இத்தாலிய பாராளுமன்றத்தில் புதிய மந்திரி சபை மீது நம்பிக்கைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தீர்மானத்திற்கு சாதகமாக 303 வோட்டுகளும் பாதகமாக 118 வோட்டுகளும் கிடைத்தன.

தற்கொலை

குளியம் செய்யப்பட்டதே காரணமாம்

கண்டி, டிச. 20

கண்டியில் உள்ள ஒரு கட்டிடக் கொந்தராத்துகாரர் துப்பாக்கியால் சுட்டுத் தற்கொலை செய்துகொண்டு மாண்டுபோனார்.

சாகுமுன் பொன்வீர தமது வாக்குமூலத்தை எழுதிக் கொடுத்தார். அதில் அவர் தமக்கு பாரோ குளியம் செய்துவிட்டதாகவும், அதனால் தம் மனநிலை சீர்கெட்டதனாலேயேதாம் தற்கொலை செய்துகொண்டு விட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பர்மா கொலை வழக்கு

எதிரிகளுக்கு வழக்கறிஞர் விவாதம்

ரங்கூன், டிச. 19

பர்மா மந்திரிகள் கொலை வழக்கில் இன்று ஆங்கில வழக்கறிஞர் கர்ட்டிஸ்பெனட் எதிரிகளுக்காக ஆஜராகி விவாதித்தார். முதல் எதிரியான மாஜி பிரதமமந்திரி ஊசா குற்றவாளியல்ல வென்றும் பர்மா சுதந்திரமடைவதால் ரங்கூன் ஹைக் கோர்ட்டே முடிவான தீர்ப்பளிக்கக்கூடுமாதலாலும் பிரிவி கவுன்சிலுக்கு அப்பீல் செய்ய முடியாதாதலாலும் இவ்வழக்கில் தீர்க்க ஆலோசனையின் மீது தீர்ப்பளிக்கப்படவேண்டுமென்றும், கொலைகள் நிகழ்ந்த இடங்களை ஜூரிகள் கோஷ்டியின் எதிர்செயலாக இருக்குமென்றும், விவாதித்தார்.

இந்தோ சைனாவில் பிரெஞ்சு துருப்புகள் முனைப்பு

சைகோன், டிச. 19

கொச்சின் சைனாவிலுள்ள துடாமட் என்ற மாகாண எல்லையிலிருக்கும் மைதானத்தில் 20 ஆயிரம் பிரெஞ்சுத் துருப்புகள் விவட்நாம் துருப்புகளை தாக்குவதற்கு ஆயத்தமாகின்றன. அமைக்கணத்திலுள்ள சீனர்களை வெளியேறும்படி பிரெஞ்சு ராணுவ அதிகாரிகள் உத்திரவிட்டிருக்கிறார்கள். கொச்சின் சைனா பிரதம மந்திரி ஜென. ல் வான் உவான் மாஜி அன்னாம் மன்னர் பாவோடாவைச் சந்திக்க சைகோனிலிருந்து ஹாங்காங்கிற்குப் படகு மூலம் பாவோடாய் தனது லண்டன் பயணத்தை புதன்கிழமைக்கு ஒத்திவைத்திருக்கிறார்.

வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!

"போட்டி நேசன்"

"தமிழ் விருத்தி"ப் போட்டி நிர் 9. ன் விடைவிளக்கம்.

பொங்கல் பரிசை, மங்களமாய்ப் பெற எங்கள் "நேசன்" உதவுவது நிச்சயம்.

விலை சதம் 25. மட்டுமே!!!

உங்கள் பிரதிக்கு இன்றே எழுதுக.

"போட்டி நேசன்" காரியாலயம்

219, நாகலகம் வீதி, கிறுன்ட்பாஸ்

கொழும்பு.

உங்கள் வாழ்க்கையின் தேவைகள்

ஊக்கம்,

உற்சாகம்,

சந்தோஷம்

இவைகளை ஒருங்கே கொடுக்கக் கூடியது

'சூரியன், கடியாரம் & அசோகா திறம் பீடிகளே'

ஹோட்டாபில்:

M. V. நாதன் அன், சன்ஸ்

முக்கூடல்,

திருநெல்வேலி ஜில்லா.

S. INDIA.

பிராஞ்சு:

91, மேட்டுத்தெரு,

கொழும்பு.

ஏஜண்டுகள் இல்லாத இடங்களுக்கு ஏஜண்டுகள் தேவை.

பீடிச் சக்கரவர்த்தி.

த.பி.

செரக்கலால்

ராம்சேட் பீடி

2 பீடிரிங்லேபில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு குணவர்தனவின் அப்பீல் வழக்கு

பாராளுமன்றத்தில் விவாதிக்கப்படலாம்

கொழும்பு, டிச. 20

அவிசாவளை தொகுதி அங்கத்தவரான திரு டி. பி. ஆர் குணவர்தனவின் அப்பீல் வழக்கு பிரிவிகவுன்ஸிலில் எடுத்துக் கொள்ள பிரிட்டனின் நீதிக் கமிட்டி அனுமதிக்கவில்லை. இது சம்பந்தமாக இங்கட்சிழமை பாராளுமன்றத்திலே ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட இருக்கிறதென்று தெரிகிறது. பாராளுமன்ற அங்கத்தினரின் அபிப்பிராயங்களை தெரிவிப்பதற்காகவே இத்தீர்மானம் கொண்டுவரப்படுகிறது.

துருக்கிக்கு அமெரிக்க உதவி

யுத்தக்கப்பல்கள் அனுப்பப்படுகின்றன

ஸ்தான்புல், டிச 18

பல ரகங்களைக்கொண்ட யுத்தக்கப்பல்களும் கடற்கரை பீரங்கிகளும் அமெரிக்காவிலிருந்து வெகு சீக்கிரம் இங்கே வந்து சேரும் என துருக்கியிலுள்ள பல பத்திரிகைகள் மூலமாக அறியக்கிடக்கிறது.

துருக்கியின் கடற்படையின் பாதுகாப்பையும் போராடும் வலிமையையும் பலப்படுத்த வல்ல அவசியமென அமெரிக்கா தீர்மானித்த திட்டப்படியே இவை அனுப்பப்படுகின்றன

அமெரிக்க கடற்படையில் உள்ள உயர்ந்த உத்தியோகஸ்தர் சிலரும் துருக்கிக்கு வருவார்கள். (ராய்ட்டர்)

கத்தியால் குத்திக் கொலை

ஒருவர் கைது

கொழும்பு, டிச. 19

மத்தியாங்களியில் ஏ. எல் புஞ்சி சிங்கோ என்பவன் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளான். இது சம்பந்தமாக ஜாபின் சிங்கோ என்பவன் கைது செய்யப்பட்டிருக்கிறான். போலிசார் விசாரணை நடத்திவருகின்றனர்.

மூக்டான் நகருக்கு ஆபத்து

சீன உள்நாட்டு யுத்தம்

ஷாங்கை, டிச. 18

மஞ்சூரியாவின் பெரிய நகரான மூக்டானுக்கு ஆபத்து ஏற்பட்டுவருகிறது. நாலா திசைகளிலிருந்தும் கம்யூனிஸ்ட் துருப்புகள் முன்னேறி வருகின்றன. தாங்கமுடியாத குளிர் ஏற்பட்டுள்ளது. மூக்டான் நகரில் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டிருக்கிறது.

இத்தாலியில் இந்திய பத்திரிகை எழுத்தாளர்

ரோமாபுரி, டிச. 17

இந்தியாவின் பிரடல பத்திரிகை எழுத்தாளர்களான கரஞ்சியா தம்பதிகள் இத்தாலியிலிருந்து பிரயாணம் செய்கின்றனர். இன்று அவர்களுக்கு பரிசுத்த பாப்பரசர் பேட்டியளித்தார்.

சீனக் குடியரசின் புதிய அரசியல் திட்டம்

நாங்கிங், டிச 18

கிறிஸமஸ் பண்டிகையின் போது சீனக்குடியரசின் புதிய அரசியல் திட்டம் அமுலுக்கு வருகிறது. அதன் ஞாபகார்த்தமாக புதிய தபால் முத்திரைகள் வெளியிடப்படும்.

ரயில்வே ஸ்டேஷனில் 29 பேர் கைது

கொழும்பு, டிச. 19

நாகமை ரயில்வே ஸ்டேஷனில் டிக்கட்டிலாமல் பிரயாணஞ்செய்தவர்கள், மிதிவண்டி பிரயாணிகள் முதலியோரில் 29 பேர் நீர்கொழும்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

வடமாகாணத்தில் ஒரு குடியேற்றத் திட்டம் வேண்டும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னார். திரு வி. குமாரசாமி உள்நாட்டு உணவுப்பொருள் கொள்வனவுபற்றி வெகுவாகக்கண்டித்துப் பேசினார். அவர் கூறியதாவது:-

உள்நாட்டு உணவுப்பொருள் கொள்வனவு இலாகா ஊழல்கள் நிறைந்ததாக இருக்கிறது. தலைமைக்காரர்களுக்கும் அதிகாரிகளுக்கும் பணம் கொடுத்து என்னவேண்டுமானாலும் செய்துகொள்ளலாம் ஒருமுறை தலைமைக்காரர் ஒருவர் ஒரு பெண்ணை உள்நாட்டு உணவுப்பொருள் கொள்வனவு சம்பந்தமான ஒரு குற்றச்சாட்டுக்குட்படுத்தியபோது நான் அதில் தலையிடவேண்டியிருந்தது.

உணவுக் கட்டுப்பாட்டிலாகாகள்ள மார்க்கட் டுக்காரர்களின் சந்தோஷமான இடமாகும் உணவுக் கட்டுப்பாட்டு காவலாளிகள் கள்ள மார்க்கட்டுக்காரர்களிடமிருந்து லஞ்சம் வாங்கிக்கொண்டு பெருந்தொகையில் அரிசிகளை அப்புறப்படுத்திச் செல்ல அனுமதிக்கின்றனர். இந்த வேலைகளுக்கு நலக்குதியானவர்களை அதிக சம்பளத்தில் மந்திரி நியமிக்கவேண்டும்.

பால் விநியோக ஸ்தலங்கள் திட்டமான ஒழுங்கு முறைப்படி நடத்தப்படவில்லை. எனதுடைய தொகுதியில் ஒரு பால் விநியோக ஸ்தாபனம் 400 சதுர மைல் பிரதேசத்துக்கு பால் விநியோகிக்க வேண்டியிருக்கிறது. ஒவ்வொரு பாடசாலைகளிலும் பால் விநியோக ஸ்தாபனங்கள் இருக்கவேண்டும் இந்த ஸ்தாபனங்களின் மேற்பார்வையாளர்கள் அரசியலில் ஈடுபடுதல் அனுமதிக்கப்படாது இப்பொழுது பால் விநியோக ஸ்தாபனங்களில் பாரபட்சம் காட்டப்படுகிறது. மேற்பார்வையாளரின் அரசியல் தொடர்பு இங்கு பிரதிபலிக்கிறது. பூநகரி பகுதியில் மக்கள் மிகவும் கஷ்டப்படுகின்றனர். இங்கு பால் விநியோகத்துக்குத் தகுந்த ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

திரு என். எச். கீர்த்திரத்ன பேசுகையில் சங்கக் கடைகள் சம்மேளனம் ஸ்தாபிக்கப்பட்டு வர்த்தகத்தை நடத்த ஒழுங்குகள் செய்யப்பட வேண்டுமென்றும் பொருள் கொள்வனவு இலாகா நடத்தப்படும் முறைகள். சிங்கேடானவைகள் என்றும் வீடமைப்புத் திட்டத்தை கூட்டுறவு முறைக்குள் கொண்டுவர வேண்டுமென்றும் இதனால் மக்களுக்கு அதிக வசதிகள் கிடைக்குமென்றும் கூறினார்.

திரு ஜே. எச் மார்ட்டின் பேசுகையில் கூட்டுறவு இயக்கம் முற்றுகத் திருத்தியமைக்கப்படவேண்டுமென்று கூறினார்.

திரு கே ஹாரத் பேசுகையில் உள்நாட்டுப் பொருள் கொள்வனவுத் திட்டத்தைக் கண்டித்தார். இத்திட்டம் முழுமையும் விதானையாரில் தங்கியிருப்பதாகவும் அவர்கள் விவசாயிகளைச் சுரண்டுகின்றனர் என்றும் கூறினார். பால் விநியோகம்பற்றி அவர் பேசுகையில் பாரபட்சம் காட்டப்படுதலைக் கண்டித்தார்.

திரு ஸி. குணவர்தன பேசுகையில் தமது தொகுதியிலுள்ள பால் விநியோக முறைபற்றி கண்டித்துப் பேசினார்.

திரு ரெஜி பெரேரா பேசுகையில் கூட்டுறவு இயக்கத்தினை அரசாங்கம் பாதுகாக்க உடனடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் இந்த இயக்கத்தை நசுக்க முனையும் வர்த்தகர்களை இரகசியப் போலிசாரை வைத்து வேவு பார்க்கவேண்டுமென்றும் கூறினார்.

திரு டபிள்யூ பெரேரா பேசுகையில் பால் விநியோக ஸ்தாபன மேற்பார்வையாளர் நியமன கொள்கையை மந்திரி மாற்றவேண்டுமென்று கூறினார் திரு வி. ஜி. டபிள்யூ. ரத்னாயகா பேசுகையில் சீனி விலை குறைக்கப்படவேண்டுமென்றார்.

திரு ஏ. ரத்னாயகா பேசுகையில் விவசாயிகள் இன்று தங்கள் நெல்லுக்கு அதிக விலை வேண்டுமென்கின்றார்கள் என்றும் வெளியிடத்து அரிசிக்கு அரசாங்கம் கொத்தக்கு 66 சதம் கொடுக்கிறதாகவும் உள்நாட்டு உற்பத்திக்கு ஏன் இவ்விதம் அரசாங்கம் பணம் கொடுக்கமுடியாதென்று தெரியவில்லையென்றும் கூறினார்.

திரு ஜே. இராஜலிங்கம் பேசிய பின் திரு சுப்பையா பேசுகையில் பால் விநியோக ஸ்தாபனங்கள் தமது தொகுதியில் திருத்தியமைக்கப்பட வேண்டுமென்றும் இங்கு வைத்திருக்கப்படும் இடாப்புகள் முழுவதும் மோசடியானவைகளென்றும் குழந்தைகளின் பெற்றோர்களுக்கு ரேஷன் கார்டுகளின்படி பால் மாவும் சீனியும் வழங்கப்படவேண்டுமென்றும் இப்பொழுதுள்ள முறை நீக்கப்படவேண்டுமென்றும் கூறினார்.

டாக்டர் கொல்வின் ஆர். டி சில்வா பேசுகையில் உணவு உற்பத்தியிலீடுபட்டுள்ள விவசாயிகள் நன்கு கவனிக்கப்படவேண்டுமென்றும் இத்துறை இலாபகரமானதாகக் காணப்படாதுவிடின் விவசாயிகள் வேறு வேலைகளை நாடுவார்கள் என்றும் கூறினார்.

திரு ஏ. ரத்னாயகா பேசுகையில் தேசத்தின் உணவு நிலை மோசமாக இருப்பதாகவும் 6 சத விகித உணவு பொருள் வெளியிலிருந்துதான் வாங்க வேண்டியிருப்பதாகவும் பிரஸ்ஸில் அரிசிக்கு கொத்துக்கு 66 சதமும் வெளியிடத்து அரிசிக்கு கொத்துக்கு 62 சதமும் பர்மா அரிசிக்கு கொத்துக்கு 42 சதமும் கொடுக்கப்படுவதாகவும் கூறினார்.

தொடர்ந்து பேசுகையில் விரைவில் அரிசி ரேஷன் அதிகரிக்கப்படுமென்றும் உள்நாட்டு உணவுப் பொருள் கொள்வனவுத் திட்டத்தைத் திருத்தியமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் கிரியெல்ல தொகுதி அங்கத்தவர் ஸ்ரீமதி ஏலோரன்ஸ் சேனநாயகா பால் விநியோகஸ்தாபனங்களை கார்ஸ்களிடம் ஒப்படைக்கும்படி கூறியதுபற்றி ஆலோசிக்கப்படுமென்றும் கோகிலை பிரதேசியின் ஆலோசனைகளும் கவனிக்கப்படுமென்றும் சீனி விலை குறைக்கப்படுவது சாத்தியமல்லவென்றும் உணவுப் பொருள் விஷயத்தில் உதவிய நாடுகளுக்கு நன்றி தெரிவிக்கவேண்டுமென்றும் கூறினார்.

திரு டி. பி ஆர். குணவர்தன பேசுகையில் வயல்களின் சொந்தக்காரர்கள் கட்டாயமாக வரி கொடுக்கவேண்டுமென்றிருப்பதை ரத்துச்செய்ய வேண்டுமென்று கூறினார். இதனைக் கவனிக்கப்படுமென்றும் இதற்குப் பதிலாக வேறு திட்டம் ஒன்றை அமுலுக்கு கொண்டுவர ஆலோசிக்கப் படுமென்றும் திரு ரத்னாயகா கூறினார்.

திரு டி. எஸ். சேனநாயகா பேசுகையில் கூட்டுறவு இயக்கம் பற்றியும் பிரதிநிதிகள் சபை அங்கத்தினரின் சிபார்சுகளும் ஆலோசனைகளும் இந்த இயக்கத்தின் அபிவிருத்திக்கு ஏற்றபடி கவனிக்கப்படுமென்றும் கூறினார். டாக்டர் என். எம், பெரேராவின் திருத்தப் பிரேரணைகள் தோல்வியுற்றது மான்ய தொகை நிறைவேற்றப்பட்டது

உணவுக் கமிஷனர் (பகுதி 80 இலாகா மான்யம் ரூ. 2,875,612 சம்பந்தமாக விவாதம் நடைபெற்றது. உணவுக் கமிஷனின் சம்பளமானயதில் ரூ 10 குறைக்க வேண்டுமென திரு எஸ் ஜே. வி. செல்வநாயகம் கொண்டுவந்த திருத்தப் பிரேரணை பற்றி அவர் பேசியதாவது:-

சரியானபடி உணவு ரேஷன் புத்தகங்கள் முறைப்பட்டு அவற்றின் மீது சரியானபடி ரேஷன் உணவுப் பொருள்கள் வாங்கப்படுகின்றனவா என்பதைக் கவனிக்கவே இந்த இலாகா இருக்கிறது.

ஒரு இடத்தில் ஒரு தொழிலாளியின் (வயது 60) குழந்தையினது ரேஷன் புத்தகம் ஒன்று காணாமல் போய்விட்டது. அந்த ரேஷன் புத்தகத்தை வேறு ஒரு

இலங்கை அரசாங்கத்திற்கு பிரிட்டிஷ் அரசாங்கத்தின் பரிசு

லண்டன், டிச. 19

பிரிட்டிஷ் காமன்வெல்த் நாடுகள் தொடர்பு இலாகா மந்திரி காமன்ஸில் இன்று பேசுகையில் இலங்கைப் பிரதமடைய உபயோகத்துக்காக இலங்கை அரசாங்கத்துக்கு ஒரு கார் பிரிட்டிஷ் அரசாங்கப் பரிசாகக் கொடுக்கத் தீர்மானித்துள்ளதாக தெரிவித்தார். இலங்கை பாராளுமன்ற சபாநாயகருக்காக ஒரு பீடத்தை பிரிட்டிஷ் காமன்ஸ் சபையின் சார்பில் தாம் அளிப்பதாக காமன்ஸ் சபை சபாநாயகர் தெரிவித்தார். இப்பரிசை நேரில் அவர் எடுத்துச்செல்லவேண்டுமென்று ஆலோசனை கூறப்பட்டபோது தாம் உடனடியாக அதற்கு பதில் கூற முடியாதென்று தெரிவித்தார். கறிஸ்மஸ் விடுமுறைக்குப் பின் சபை கூடும்போது இதனை முறைப்படி ஒரு தீர்மானமாக சபையில் எடுக்கவேண்டுமென சபாநாயகர் கூறினார். (ராய்ட்டர்)

பாரசீகத்தின் பீதி

டெஹ்ரான், டிச. 18

லண்டனில் நடைபெற்ற நால்வர் மகாநாடு முறிந்து போனதுபற்றி பாரசீகம் பீதியுற்றிருக்கிறது. இனி சர்வ தேச வல்லரசுகளிடையே ஆதிக்கப் போட்டி கடுமையாக நடைபெறுமென்றும் பாரசீகம் இப்போட்டிக்கு இறையாகும் நிலைமை வரக்கூடுமோ என்றும் பாரசீகப் பத்திரிகைகள் கலங்குகின்றன.

நாளை மந்திரி சபை அமைப்பதாக புதிய பிரதம மந்திரி ஷெக்மத் பாரசீக மன்னருக்கு வாக்குறுதியளித்திருக்கிறார்.

வர் சுமார் ஒன்றரை வருடகாலம் உபயோகித்து ரேஷன் பொருள்களை வாங்கினார். அந்த தொழிலாளி மாகாண அரசாங்க அதிகாரிக்கும் (வட மாகாணம்) உணவுக் கமிஷனருக்கும் முடிவில் கவர்னருக்கும் இவ்விஷயம் பற்றி மனுச்செய்ய வேண்டியிருந்தது இது சம்பந்தமாக நடைபெற்ற எல்லா கடிதப் போக்குவரத்துக்களையும் மந்திரியின் உபயோகத்துக்கு கொடுக்கலாம், வயதான தொழிலாளியின் குழந்தையின் ரேஷன் புத்தகத்தை வைத்து உபயோகித்தவர் மீது மந்திரி தகுதியான நடவடிக்கையை எடுக்க வேண்டும்.

திரு சாம் சில்வா பேசுகையில் பத்திரிகையில் உணவுக் கமிஷனர் விடுத்திருந்த ஓர் விளம்பரம் பற்றிக் குறிப்பிட்டு விடுத்து உணவுக் கட்டுப்பாட்டு வேலைகளை பிரதமதலைமைக்காரராலேயோ அன்றி மற்றும் தலைமைக்காரராலேயோ நடத்தப்பட அனுமதிக்கப்படாதென்று கூறினார் இந்த இலாகா மான்யம் நிறைவேறியது.

உணவுக் கமிஷனர் (பகுதி 81) விநியோக இலாகா மான்யம் பற்றி விவாதம் நடந்தது திரு தஹநாயகா பேசுகையில் சீனி வாங்குவதுபற்றி இந்த இலாகா நடந்துகொண்ட முறைகளைக் கண்டித்துவிட்டு இலங்கை அரசாங்க வர்த்தக பிரதிநிதிகள் மூலமாக சீனி வாங்க ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று கூறினார் மந்திரி இதற்குப் பதிலளிக்கையில் ஐக்கியூபா சீனி வாங்குவதுபற்றி கறிப்பிட்டார். சீனியில் கள்ளமார்க்கட்டு வர்த்தகம் நடப்பதாக திரு தஹநாயகா கூறியதற்கு இது சம்தந்தமாக இலாகாவின் கமிட்டியொன்று விசாரணை நடத்தவதாக மந்திரி தெரிவித்தார். கிராமப் பகுதியின் சீனி ரேஷன் 6 அவுன்ஸில் இருந்து 8 அவுன்ஸாக அதிகரிக்கப்படுமென்றும் அவர் கூறினார். இம்மான்ய தொகை நிறைவேறியது.

அடுத்தபடியாக சங்கக் கடைகள் பதிவு அதிகாரி இலாகா (பகுதி 82) மான்யம் ரூ. 3,300,985 சம்பந்தமாக விவாதம் நடைபெற்றது. இம்மான்யமும் நிறைவேறியது.

இதன்பின் கூட்டுறவு கமிஷனர் இலாகா மான்யம் ரூ 131,943 சம்பந்தமாக விவாதம் நடைபெற்றது

இதன்பின் சபை நடவடிக்கை திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

விவசாய உர உற்பத்தித் தொழிற்சாலை

ஒருகோடி பவுண் செலவில் இந்தியாவில் நிறுவப்படும்

லண்டன். டிச. 18

ஒரு கோடி பவுண் செலவில் பிகார் மாகாணத்துள்ள சிந்திரி என்னுமிடத்தில் விவசாயத்திற்கு உரம் தயாரிக்கும் பெரியதோர் தொழிற்சாலை நிறுவப்படும்.

யந்திரங்களை வாங்க இந்திய அரசாங்கம் டர்ஹாமிலுள்ள ஒரு பெரிய கம்பெனியுடன் ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கிறது. நியூயார்க்கிலுள்ள கெமிக்கல் கன்ஸ்ட்ரக்ஷன் கார்ப்பொரேஷனைப் போல இந்தியாவில் தொழிற்சாலை நிறுவப்படும். இத்தொழிற்சாலை ஆசியாவிலேயே ஒரு பெரிய தொழிற்சாலையாக இருக்கும். 2000 பேர்கள் வேலை செய்வார்கள். இதை நடத்த இந்தியர்களுக்குப் பயிற்சி அளிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

1950-வது வருடத்திற்குள் தொழிற்சாலையில் உற்பத்தி ஆரம்பமாகும் இதில் வருடத்திற்கு 350 000 டன் அமோனியம் சல்பேட் என்ற உரம் உற்பத்தி செய்யப்படும். இந்தியாவுக்கு இப்பொழுது இந்த உரம் ஒரு லட்சம் டன் தேவைப்படுகிறது.

இந்தோனேஷியாவைப் பிரிக்கலாகாது

குடியரசுப் பிரதமர் எச்சரிக்கை

பட்டேவியா, டிச 18

மேற்கு ஜாவா தனியாகப்பிரிந்து டச்சு கிழக்கிந்திய சமஷ்டியில் சேருவது சம்பந்தமாக முடிவு செய்ய மேற்கு ஜாவா மாகாநாடு நடைபெறும் தறுவாயில் இந்தோனேஷிய குடியரசு பிரதம மந்திரி டாக்டர் ஷாரி புடின் அதனால் ஏற்படும் அபாயத்தைக் குறித்து எச்சரிக்கை விடுத்தார். சமரசப் பேச்சு முடிவதற்குள் இவ்வித நடவடிக்கை எடுப்பது தவறு என்று தெரிவித்தார். மூவர் கமிஷன் அங்கத்தினரான பெல்ஜிய மாஜி மந்திரி 4 வாரங்களாக பெல்ஜியம் சென்று இன்று திரும்பிவந்தார்.

கொழும்பு, டிச. 19

1948 ஏப்ரல் 14-ம் தேதியை ஒரு பகிரங்க விடுமுறை நாளாக உள்நாட்டு மந்திரி பிரகடனம் செய்துள்ளார். இவ்விடுமுறை சிங்கள தமிழ் புதுவருடங்களையொட்டி விடப்படுவதாகும்.

ஜிந்தும்பிட்டியாவில் இப்பொழுது
தினசரி மாலை 6 மணி, இரவு 9—30 மணிக்கு
மனதைக் கவரும் ஆடல் பாடல்கள் நிறைந்த
'தாஸி' என்னும் ஹிந்தி பேசும் படம்
ரஜினி, நஸீர் முதலியோர் திறம்பட நடித்தது.

கட்டிடத்துக்கு
தேவையான சிமந்தும்
மற்றச்சாமான்கள் எல்லாம்
எங்களிடம் குறைந்தவிலையில்
பெற்றுக்கொள்ளலாம்.
என். வயித்திலிங்கம் - கொம்பனி
No-38. மூன்றுங்குறுக்குத் தெரு,
புறக்கோட்டை, கொழும்பு.
டெலிபோன்: 2029 டெலிகிராம்: ENVAITLING
கிளை:- பெரியகடைத் தெரு,
யாழ்ப்பாணம் டெலிபோன்: 30.

OUR CEYLON REPRESENTATIVE
ஆர். குசலவசேட்
91, மேட்டுத் தெரு, கொழும்பு.

கிங்ஸ்லியில் தினசரி மாலை 6 மணி, இரவு 9-30 மணிக்கும் சனி, ஞாயிறு மெட்னி 2-30 மணிக்கும்
என். எஸ். கிருஷ்ணன், டி. ஏ. மதுரம், டி. ஈ. வரதன், எம். எஸ். சரோஜினி, எம். ஆர். சந்தானலக்ஷ்மி, காளி என். ரத்தினம் ஆகியோர் திறம்பட நடிக்கும்
கன்னிகா
மகத்தான 6-வது வாரம்
பார்க்கப் பார்க்க பரவசமூட்டும் பாவையர் நடனங்கள், செவிக்கினிய கீதங்கள், கண்ணுக்கினிய காட்சிகள், உள்ளங்கவரும் உயரிய நடிப்புகள் நிறைந்தது.

கிரவுன் தியேட்டர் ஸ்கின்னர்ஸ் ரோடு, மருதானை.
தினசரி மாலை 6-15, இரவு 9-30 மணிக்கும், சனி, ஞாயிறு மெட்னி 2-30 மணிக்கும்
சித்ரகலாவின் உன்னத தயாரிப்பு
முதல் நம்பர் நடிகர்கள் எடிஜெயமான, ருக்மணி தேவி மற்றும் பலர் நடிக்கும்
'இழந்த உறுதி'
என்னும் வர்ணம் தீட்டப்பட்ட முதல் சிங்களப் படம்
புதிய இயந்திர அமைப்புகளுடன் இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட்டிற்காக, 1947-ம் வருஷம் டிசம்பர் மாதம் 21-ம் தேதி இப்பத்திரிகை 194 ஏ, தட்டாரத்தெரு, கொழும்பு சுதந்திரன் அச்சுக்கந்தோரில் அச்சிட்டு கொழும்பு மெயின்ஸ்டிரீட்டில் இருக்கும் சிங்காரம் நடராசா அவர்களால் வெளியிடப்படுவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org